RIGHT TO INFORMATION ACT-2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

**காமதேனு பல்பொருள் அங்காடி கட்டிட முதல் தளம், 378 அண்ணா சாலை,** தேனாம்பேட்டை, சென்னை–18.
தொலைபேசி 24357580

<u>வழக்கு எண்.25004/விசாரணை/ 2009,</u>

<u>விசாரணை நாள் = 29–1–2010 (இராமநாதபுரம்)</u>

முன்னிலை_ = முனைவர் (திரு) ஆர். பெருமாள்சாமி,
எம்.ஏ.,எம்.பில்.,பி.எச்.டி.,
மாநில தகவல் ஆணையர்

மனுதாரர் = திரு எஸ். மூக்கையா, த/பெ சிவன்காளை
பெருங்காமநல்லூர் ஊராட்சி
சேடபட்டி ஊராட்சி ஒன்றியம்,
பேரையூர் வட்டம், மதுரை மாவட்டம்

பொது அதிகார அமைப்பு = பொதுத் தகவல் அலுவலர்
வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி)
சேடபட்டி ஊராட்சி ஒன்றியம், சேடப்பட்டி
மதுரை மாவட்டம்

========

இன்று (29.1.2010) இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இவ்வாணையத்தால் நடத்தப்பட்ட விசாரணைக்கு மனுதாரர் திரு எஸ். மூக்கையா வரவில்லை. பொது அதிகார அமைப்பின் சார்பில் மதுரை மாவட்டம், சேடபட்டி ஊராட்சி ஒன்றியத்தின் வட்டார வளர்ச்சி அலுவலர் (நிருவாகம்) திரு ஆர். ஜீவானந்தம், வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) திருமதி ச. மல்லிகா ஆகியோர் வந்திருந்தனர்.

2. தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005ன் சட்டப் பிரிவு 6(1)ன் கீழ், மனுதாரர் 27.5.2009 அன்று வட்டார வளர்ச்சி அலுவலர், சேடபட்டி ஊராட்சி ஒன்றியம், மதுரை மாவட்டம் என்று முகவரியிட்டு, 2006 முதல் 2008 முடிய தொகுப்பு வீட்டு பயனாளிகள் மற்றும் பட்டா நகல் வழங்கக் கோரி விண்ணப்பித்திருந்தார். மனுதாரருக்கு 23.6.2009 தகவல்கள் அளிக்கப்பட்டுள்ளன. தகவல் முழுமையாக இல்லாததால், சட்டப் பிரிவு 19(1)ன் கீழ் 10.7.2009 மற்றும் 17.8.2009 ஆகிய தேதிகளில் முதல் மேல்முறையீடும், சட்டப் பிரிவு 19(3)ன் கீழ் 6.10.2009 அன்று இவ்வாணையத்திற்கு இரண்டாம் மேல்முறையீடும் செய்ததன் அடிப்படையில், சட்டப் பிரிவு 18(3)ன் கீழ் இன்று இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

3. இன்றைய விசாரணைக்கு மனுதாரர் வரவில்லை. விசாரணைக்கு வந்திருந்த பொதுத் தகவல் அலுவலர், மனுதாரர் கோரிய தகவல்களை 19.1.2010 அன்று வழங்கியதாகத் தெரிவித்தார். மனுதாரரும் பொதுத் தகவல் அலுவலர் வழங்கிய தகவல்களை பெற்றுக் கொண்டதாகத் தெரிவித்து, மனுதாரரிடமிருந்து பெறப்பட்ட ஒப்புகைக் கடிதத்தின் நகலை இவ்வாணையத்தின் முன் சமர்ப்பித்தார். மேலும் இதுகுறித்து மேல்நடவடிக்கை எடுக்க வேண்டாமென்று மனுதாரர் தனது கடிதத்தில் தெரிவித்ததன் அடிப்படையில், இதுகுறித்து மேலும் விசாரிப்பதற்கு ஏதுமில்லையென்று கருதி, இவ்வழக்கு இத்துடன் முற்றாக்கப்படுகிறது.

மாநில தகவல் ஆணையம்

ஒப்புதல் பெறப்பட்ட
நாள் 11 பிப்ரவரி, 2010.

உதவிப் பதிவாளர்

**வழக்கு எண்.25004/2009**
**பெறுநர்**
**பொதுத் தகவல் அலுவலர்,**
**வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி)**
**சேடபட்டி ஊராட்சி ஒன்றியம், சேடப்பட்டி**
**மதுரை மாவட்டம்**

**வழக்கு எண். 25004/2009**
**பெறுநர்**
**திரு எஸ். மூக்கையா, த/பெ சிவன்காளை**
**பெருங்காமநல்லூர் ஊராட்சி, சேடபட்டி ஊராட்சி ஒன்றியம்,**
**பேரையூர் வட்டம், மதுரை மாவட்டம்**